
உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவனடியார் திருக்கூட்டம்.



பஞ்சாட்சரபுரம்
வாலையானந்தம்.

இதன் விலை அணா 3.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவனடியார் திருக்கூட்டம்.

இஃது

திருக்கற்குடிச் சிவனடியார் திருக்கூட்டத்தின்
5, 6, 7-வது ஆண்டுகளின் நிறைவு விழாவில்
(இரக்தாட்சி௵ ஆவணி௴ 9உ)

தலைமைவகித்த

பஞ்சாட்சரபுரம்

உயர்திரு. வாலையானந்த சுவாமிகள்

முன்னுரையாகச் செய்த சொற்பொழிவு.

சென்னை
திருவல்லிக்கேணி
சோல்டன் கம்பனியாரால்
அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

1925.

உ

குருபாதம்.

திருச்சிராப்பள்ளி-திருக்கற்குடி

சிவனடியார் திருக்கூட்டம்.

ஏழாம் வருட நிறைவு விழா.

வாழ்த்து.

சீரார் தருமை யருணந்தித் தேவன் பாதஞ் சேர்ந்தருளால்
நாரார் ஞான நன்னெறியை நண்ணும் வாலையானந்தப்
பேரார் முனிவ னவைத்தலைமை பெற்ற நற் கற்குடிவாழும்
பாரார் சிவன்ற னடியார்தம் பரமார் கூட்டம் வாழியவே.

இங்ஙனம்:

திருக்கைலாய பரம்பரை தருமபுரவாதீனம் சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் கட்டளைப்படி மேற்படி ஆதீனம் வேளூர் கட்டளை விசாரணை தரு-ஞா. ஷண்முகத் தம்பிரான் இயற்றியது.

ஒப்பம்-தரு-ஞா-சண்முகத்தம்பிரான்,

19—8—24.

உ

சிவமயம்.

திருக்கைலாய பரம்பரை

தருமபுரவாதீனம்

வேளூர்க் கட்டளை விசாரணை,

ஸ்ரீ ல ஸ்ரீ வித்வான் சண்முகத்தம்பிரான் சுவாமிகள்.

இயற்றியது.

பவனடியார் திருக்கூட்டம் பணிந்தேத்துங் குருமூர்த்திபாதம் போற்றுஞ்
சிவனடியார் திருக்கூட்டச் சிறப்புரைத்திவ் வுலகினையுஞ் சிறக்கச் செய்தான்
அவனடியா ருணர்ந்தி யலர்பாதத் தருளாலே யழியா மோன
தவனடியா ரஞ்செழுத்துத் தனிசகரான் வாலையா னந்தன் றானே,

தில்லைவளாகம்.

சிவாநந்தாநுபூதி நிலைய மடாலயவாசி

உயர்திரு. ஆநந்த ஷண்முக சரணாலய சுவாமிகள்

இயற்றியது.

பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றுசம யிகணிற்கப் பெரி தாஞ் சைவ
சித்தாந்த நெறிதேர்வார்க் குரியபடத் துடன்விளக்கஞ் செய்த சீமான்
முத்தாந்த நிலையுணர்ந்த வாலையானந்தனெனு முனிவன் றானே
சித்தாந்த வீதிவருஞ் சிவனடியார் திருக்கூட்ட மெனுநூற் செய்தான்.

சிவமயம்.

முகவுரை.

கடவுள் இயல்பாகவே உண்மையறிவானந்த சோதி வடிவினர். உயிர்கள் இயல்பாகவே ஆணவமலத்தால் தடைப்பட்ட அறிவிச்சை செயல்களை உடையவர்களாய் மாயையில் அநாதியாகவே வசிப்பவர்கள். ஆணவம் பல பேதமாக உயிர்களை மறைக்கின்ற அநேக சக்திகளை உடையது.

கடவுள் தமது காருண்யத்தினாலே உயிர்களுக்குப் பலவகையான தனு கரண புவன போகங்களை மாயையினின்றும் தோற்றுவித்தார். உயிர்கள் அவற்றோடு கூடித் தமது அறிவிச்சை செயல்கள் விளங்கப் பெற்றபோது, அவர்கள் பின்பற்றி நடக்கவேண்டிய பல சமயங்களையும், அவற்றிற்கான விதிகளையும் கடவுள் வகுத்தார். அவைகளை உயிர்கள் தமது கர்மாநு குணமாகக் கொண்டு, இன்பத்தைத் தேடி நுகரலாயினர்.

அவர்களுட் பலர் தமது அறியாமையாலே பேரருளாளரை மறந்து தம்மையே மதித்துச் செருக்குற்று அலமருகின்றார்கள். சிலர் அக் கருணாநிதியின் பேருபகாரத்தை மறவாது, அவரையே தமக்கேற்ற இன்பப்பொருளாகக் கொண்டு, அவர்பால் அன்புற்று, ஆண்டானடிமைத் திறத்தால் அவரை வழிபடுகின்றார்கள். அவ்விரு திறத்தாரும், அவர் உட்பிரிவினர்களும், தமது கொள்கைகளுக்கேற்ற நடை யுடை பாவனைகளை யுடையவர்களாய், முற்காலத்தி லிருந்தார்கள். அவற்றில் மாறுபட்டவர்களை,

அக்காலத்திய அரசர்கள், தத்தம் நெறியிற் பிறழாது தமது ஆணையால் நிறுத்துவார்கள். இக்காலத்திய அரசர்கள் தங்கள் முக்கிய கடமைகளுள் ஒன்றாக அதைக் கருதுவதில்லை. அதனால், அவ்விரு திறத்தாரும், தமது நடையுடை பாவனைகளினின்றும் தமது இச்சை வழிப் பிறழலாயினர்.

ஆதலினாலே, உண்மை நெறியில் ஆண்டானடிமைத் திறத்தால் கடவுளை வழிபட முயற்சிப்பவர்கள், தங்களுக்கு ஏற்ற துணைவர்களை அறிந்து பின்பற்ற முடியாமல் மயங்கி இடர்ப்படுகின்றார்கள். பலர் உண்மையை உணராது மயங்கித் தமது கருத்துக்கு மாறான கொள்கைகளை யுடையவர்களைப் பின்பற்றித் துன்புறுகின்றார்கள். அது பற்றியே ஆண்டானடிமைத் திறத்தால் கடவுளை வழி படுபவர்களிற் சிறந்தவர்களாகிய சிவனடியார்கள் இன்னா ரென்பதையும், அவர்களது சிறந்த கொள்கைகளும் கடமைகளும் இன்னவை யென்பதையும், தமக்குள் எவ்வித பகையுமின்றி உறவாய்க் கூடி அவர்கள் வாழ்வார்களென் பதையும், அத்தகையர் கூட்டமே சிவனடியார் திருக்கூட்டம் எனத் தக்கது என்பதையும் விளக்க, இச் சிறிய வியாசத்தை வெளியிட லானேன். இதிற் பிழை யுளதேல் அறிவுலகம் பொறுக்க.

பஞ்சாட்சரபுரம்,

வாலையானந்தம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவனடியார் திருக்கூட்டம்.

கணபதி வணக்கம்.

திருந்திய வருந்தவம் பொருந்துபன் முனிவர்
கமையாக் காத லமையாது பழிச்சும்
நிகரில் செக்கர்ப் புகர் முகத்தெழுந்த
புனிற்று வெண்பிறைத் தனிப் பெருங் கோட்டுத்
தழைசெவி மழைமதப் புழைநெடுந் தடக்கை
வாட்டரு மும்மை நாட்ட நால்வாய்ப்
பாச மங்குசந் தேசுறு மெயிறொண்
கனியிவை தாங்கும் புனித நாற்காத்
தங்கதங் கடகம் பொங்கிழை யார
நிறைமணிச் சுடிகைக் கறையணற் கட்செவி
கொண்ட திண்பெரும் பண்டிக் குறுந்தாட்
களிறுத னிருகழல் கருதா
வெளிறுறு துயாம் வீட்டினம் பெரிதே.

சிவனடியார் திருக்கூட்டமென்ற சொற்றொடர் சிவன தடியார் அஃதாவது சிவனதடியிலிருப்பவர் என்றும், சிவனுக்கு அடியார் அஃதாவது சிவனுக்கு அடிமைத் தொழிலர் என்றும் பொருள்படும் இருவிதத் திருக்கூட்டங்களை

உணர்த்தி, சிவன், அடியார், திரு, கூட்டம் என நான்காய்ச் சிவம், சிவன், அடி, அடியார், திரு, கூட்டம் என்ற ஆறு அம்சங்களைக் கொண்டதாகும். அவற்றுள் :—

1—சிவம்.

I. 1. சி என்பது கிடத்தல் எனப் பொருள்படுவதால், சர்வ சங்கார காலத்தில் உலகங்கள் அனைத்தும் சாதாரண தத்துவங்களிலும், சாதாரண தத்துவங்கள் பஞ்ச கலைகளிலும், ஐவகைக்கலைகள் மாயையிலும், மாயை சிவசத்தியிலும், சிவசத்தி சிவத்திலும் ஒடுங்கச், சிவம் சுயம்பிரகாசமா யிருப்பதாகும். கிடத்தல்=இருத்தல் அஃதாவது உள்ளது.

"ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டாப் பிறப்பு"

என்ற உத்தரவேதமும் சிவத்தை உள்ளது என்று கூறுகின்றது.

2. சி என்பது கிடத்தலை உணர்த்தி உறைவிடமெனப் பொருள்படுவதால், மலினம் நீங்கி அதி சுத்தமென்னும் சிவத்துவம் விளங்கப்பெற்ற உயிர்கள் தங்குமிடமாகும். அதனை :—

"பற்றற்றார் சேர் பழம்பதி" என்றும்,
"சிவமாநகர்" என்றும்,
"பசுபதி" அஃதாவது பசுக்களுக்கு இடம் என்றும்,
"சிவலோகம்" என்றும்,
"செல்கதி" என்றும்,

வரும் பிரமாணங்களினாலும், சிவ என்ற சொல் எழுத்து நிலைமாறலால் வசி எனப்பட்டு தங்கு என்று பொருள் தருதலாலும் துணியப்படும்.

சி என்ற எழுத்து பதியை உணர்த்து மெழுத்தென் பதற்குப் பிரமாணம் :—

"சிவனரு ளாவி திரோதமலமைந்து
மவனெழுத் தஞ்சி னடைவாம்." (உண்மை விளக்கம்.)

3. சி என்பது மெலிவித்தல் எனப் பொருள் தருதலால், உயிர்களுக் குரிய அநாதி மல சத்தியை மெலிவித்தலாகும்.

4. சி என்பது கூருவித்தல் எனப்பொருள் பயப்பதால், உயிர்களுக் கியல்பாயுள்ள சிற்சத்தியை அதிகரிக்கச் செய்தலாகும்.

II. 1. வ என்பது சத்தியாகும். அது சி யின் குணம். அது பரிதியிற் கிரணம் போல்வது. பரிதியும் கிரணமும் தம்முள் வேறல்ல வாயினும், குணகுணித் தன்மையால் இருவேறு வகையாக எண்ணப்படும். அவ்வாறே சத்தி, சிவம் என்பன தம்முள் வேறல்ல வாயினும் குணகுணி பாவத்தால் இருபொருளெனப்படும். ஆதலினாற்றான் அப்பொருள் பயக்கும் பெயராய் இரண் டியல்பினையும் அடக்கிச் சிவம் எனப்பட்டது.

"சுத்தமாஞ் சத்தி ஞானச் சுடரார்துஞ் சிவமொழிந்தச்
சத்திதானின்றாம்" (சிவப்பிரகாசம்)

"துரியங்கடந்த சுடர்த்தோகையுட னென்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான்" (திருக்களிற்றுப்படியார்)

"சத்தியுஞ் சிவமு மாய தன்மையிவ் வுலக மெல்லா
மொத்தொவ்வா வாணும் பெண்ணுமுணர் குணகுணியுமாக
வைத்தனன்" (சிவஞானசித்தியார் சுபக்கம்)

"மாறாப்—பரை யெனுங் கிரணஞ் சூழ்ந்த பாநுவே"
(தாயுமானார்பாடல்)

என்பன பிரமாணங்கள்.

2. வ என்பது அருள் எனப்பொருள்படும். அவ்வருள் சிவத்தின் சத்தியாகும். சத்தியென்றது வல்லமையை; பெண்தன்மையை அன்று. இச்சத்தியானது சிவத்திற்கு உயிர்கள் மாட்டு இயல்பாகவே உள்ள கருணையேயாகும். சிவத்தின் கிருத்தியங்கள் அனைத்துக்கும் ஆதிகாரணமாயுள்ளது இவ்வருளானதால், இதற்கு ஆதி என்றும், ஆதிசத்தி என்றும் பெயர்.

அதுபற்றியே தெய்வப்புலவரும் கடவுள் வாழ்த்துக் கூறுமிடத்து, தமது முதற்றிருக் குறளிலேயே, பொதுக் குணங்களைக் குறிக்கும் "பகவன்" எனத் தனியே கூறின் இறைமைக் குணமில்லாத பலர் பாலும் செல்லுமென்று கருதி, அத்தோடத்தை நீக்க, ஆதி என்ற அடைகொடுத்து, சிவசத்தி அல்லது அருள் சத்தியோடு கூடிய பகவனென்று பொருள்பட "ஆதிபகவன்" எனக்கூறி வழிபட்டார்.

அதனை வலியுறுத்தவே சிவத்தினது சிற்குணங்களிற் சிலவாகும் வாலறிவு, மலர்மிசையேகல், வேண்டுதல்வேண்டாமை, பொறிவாயிலைந்தவித்தல், தனக்குவமையில்லாமை, அறவாழியாயிருத்தல், அந்தணனுயிருத்தல் ஆகியவைகளை இரண்டாவது முதலிய திருக்குறள்களால் வகுத்துக் கூறி, பின்னரும் மலைவு நேராதிருத்தற்கு, "தன்வயம், தூயவுடம்பு, இயற்கையுணர்வு, முற்றுணர்வு, இயல்பாகவே பாசங்களி னீங்கல், பேரருளுடைமை, அளவிலாற்றல், வரம்பிலின்பமெனச் சிவத்திற்குச் சிறப்பாகச் சித்தாந்த நூல்கள்கூறும்" எண்வகைச் சிற்குணங்களை ஒன்பதாவது திருக்குறளில் தொகுத்தோதியதுமாம்.

இவற்றை விளக்கப்புகின் விரிவாகுமென் றஞ்சி விடுக்ப்பட்டது. சித்தாந்தநூல் வழக்கறியார் மாறுபடக்கூறின்

சித்தாந்த நூல்களை ஒட்டி யாராய்ந்து உண்மை அறிவது கடமையாகும்.

மேலும் அந்த அதிகாரத்திலேயே ஐந்தாவது திருக்குறளில் "இருள்சேரிருவினை" என அழகுபடக்கூறியிருப்பதை நுனித்தறியின் அதனுண்மை விளங்கும்.

இதுகாறும் கூறியவாற்றால் வ என்பது அருளென்றும், அருளே சத்தி யென்றும், அதுதான் முதல்வனது ஐந்தொழில்களுக்கும் காரணமென்றும், சிவமுள்ள வன்றே அருளு முண்டென்றும் பெறப்பட்டது. இதற்குப் பிரமாணம் :—

"சிவனரு ளாவி திரோதமல மைந்தும்
அவனெழுத் தஞ்சி னடைவாம்" (உண்மைவிளக்கம்)

"அருளுண்டா மீசற் கதுசத்தி யன்றே
யருளு மவனன்றி யில்லை" (சிவஞானபோதம்)

"அருளது சத்தி யாகு மரன்றனக் கருளை யின்றித்
தெருள்சிவ மில்லை யந்தச் சிவமின்றிச் சத்தி யில்லை"
(சிவஞானசித்தியார் சுபக்கம்)

"பெருக்க நுகர்வினை பேரொளியா யெங்கு
மருக்கனென நிற்கு மருள்" (திருவருட்பயன்)

அருளானது ஞானம், ஆனந்தம் என இருதிறப்படும்.

"சத்திதன் வடிவே தென்னிற் றடையிலா ஞானமாகும்"
என்பது ஒத்து.

அந்த ஞானம், சத்து சித்து என இருவகைப்படும்.

ஆனந்தமானது முன்னர்க்கூறிய தன்வயமாதி எண்வகைச் சிற்குணங்களோடு கூடியது.

III. 1. இனி "ம்" என்பது மௌன எழுத்தாகும். அது அருளோடுகூடிய சிவம் வாக்கிற் கதீதமானது என்பதை உணர்த்துகின்றது. அஃதாவது சுத்த மாயாகாரிய வாக்குகளிறந்த விடத்திலேதான் சிவம் விளங்கும் என்பதாம்.

" வாக்காலு மிக்க மனத்தாலு மெக்காலுந்
தாக்கா வுணர்வரிய தன்மையனை " (கொடிக்கவி)

" செயல்வாக்குச் சிந்தை யெல்லாம் அவனையணுகா "
(சித்தியார்)

" அவன் வாக்கு மனாதீத கோசரமாய் நிற்றலான் "
(சிவஞானபோதம்)

" உரையிறந்தால் உன்னும் உணர்விறந்தால் மாயைத்
திரையிறந்தால் காண்கின்ற தேவை " (சிவபோகசாரம்)

என்பன பிரமாணங்கள்.

2. "ம்" என்ற மகாரமானது முதல்வனது ஈசானாதி பஞ்சப்பிரபாவங்களில் அகோரத்தை உணர்த்தி, அதனால்-சி-என்ற எழுத்தாற் பெறப்பட்ட பதிப்பொருளானது வ-என்ற எழுத்தாற் பெறப்பட்ட தனது குணமாகிய அருளால் சீவர்களுக்குரிய அஞ்ஞானத்தைப் போக்கும் தன்மையது என விளக்குகின்றது.

அகோரம்=கோரமில்லாமையைச் செய்வது.
கோரம்= அஞ்ஞானம்.

மகாரம் அகோரத்தை உணர்த்துவது என்பதற்குப் பிரமாணம் :—மகுடாகமம் :—

" அகாரஃ ஸத்ய வக்த்ரம் ஸ்யா துகாரம் வாம வக்த்ரகம்
மகாரோ கோர வக்த்ரம் ஸ்யாத் பிந்துஸ்தத்புருஷாநநம்,
நாத ஸ்த்வீசாந வக்த்ரம் ஸ்யாந் நாதாதீதம் நடேச்வரம் "

இதன் பொருள் :—தாண்டவேச்வரர் எனப்படுகின்ற நாதாதீத நடேசர்க்குரிய சத்தியோசாத முகம் அகாரமாயும், அவருடைய வாமதேவ முகம் உகாரமாயும், அகோர முகம் மகாரமாயும், தத்புருஷமுகம் விந்துவாயும், ஈசான முகம் நாதமாயும் உள்ளன என்பதாம்.

IV. 1. இனி சி என்ற எழுத்தில் உள்ள இகரமாகிய அண்மைச் சுட்டானது, பதிப்பொருள் வாக்கு மனாதீத மெனப்படுவதால், அது யாண்டையதோ என ஐயுற்று, சேர்தற்கருமை நோக்கி அதனை அடைய மனவெழுச்சி யில்லாது அயர்தலை நீக்க, அப்பதிப்பொருளின் வியாபகத்தை யுணர்த்தி, அப்பதியை நினைக்கு மிடத்திலேயே அப்பதி விளங்கு மென்பதை உணர்த்துகின்றது.

"வாயானை மனத்தானை மனத்துள் நின்ற கருத்தானை"

(திருத்தமிழ்வேதம்)

"மனத்து ளெழுகின்ற மாயநன்னுடன்" (திருமந்திரம்.)

என்ற அருள்வாக்குகளும் அதனை வலியுறுத்துகின்றன.

2. வ என்ற எழுத்தில் உள்ள அகர உயிரானது எழுத்துக்களுக் கெல்லாம் தான் முதன்மையுற்று கலப்பினாலேனைய எழுத்துக்களேயாய், பொருட்டன்மையால் அவற்றின் வேறுமாய், உயிருக்கு உயிராக இன்றியமையாமைபற்றி உடனுமாய் நிற்றல் போல, அருளோடு கூடிய பதிப்பொருளும் கலப்பினால் உடலின் உயிர்போல அவ்வுயிர்களேயாய், பொருட்டன்மையால் கண்ணின் அருக்கன்போல் அவ்வுயிர்களின் வேறுமாய், உயிருக்கு உயிரா தற்றன்மையாற் கண்ணொளியின் ஆன்மபோதம்போல் உடனுமாய் நிற்கு முறையை விளக்குகின்றது.

இதனை :—

"உலகேலா மாகி வேறா யுடனுமா யொளியா யோங்கி
யலகிலா வுயிர்கள் கன்மத் தாணையி னமர்ந்து செல்லத்
தலைவனா யிவற்றின் றன்மை தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீ ரமலனாகி நின்றன னீங்கா தெங்கும்.'.

(சிவஞானசித்தியார் சுபக்கம்)

" * * * * அக்கரங்க டோறுஞ்
சென்றிடு மகரம்போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே"
(சிவஞானசித்தியார் சுபக்கம்)

"அக்கரங்கட் கெல்லா மகரவுயிர் நின்றாற்போல்
மிக்க வுயிர்க்குயிராய் மேவினேம்." (உண்மைவிளக்கம்)

"அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து." (திருவருட்பயன்)

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு." (திருக்குறள்)

என்ற பிரமாணவாக்குகளும் வலியுறுத்துகின்றன.

V. சி (ஶி) என்ற எழுத்திலுள்ள ஶகாமெய்யும் வ என்ற எழுத்திலுள்ள வகரமெய்யும் மூலாதார கமல வெழுத்துக்களாதலினாலே அவற்றாற் பெறப்பட்ட பதியும் அருளுமே உலகுயிர்களுக் காதாரமென்பதை அவை உணர்த்துகின்றன.

"அவ்வயி னெங்குந்தானே யாதார மாயிருப்பத்
தவ்வுமோர் கோடகத்தை யாதாரமாக்கிச் சால
வெவ்விய மூன்று பாச மறக்கு மென் காத்து மிக்க
செவ்விய விரண்டு பாசம் பிடித்தனன் றிறமை கூற."
(நரி குதிரையான திருவிளையாடல்)

என்ற செய்யுள் பதியே எங்கும் ஆதாரமெனக் கூறுகின்றது.

"தன்னருள் வெளிக்குளே அகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த் தழைத்த
தெது"

என்ற தாயுமானர் திருவாக்கு, அருளே அண்ட கோடிகளுக் காதாரமென விளக்குகின்றது.

VI. சிவ என்ற சொல்லானது, வசிகரித்தல் எனப் பொருள்தரும் வசி என்பதன் எழுத்துநிலை மாறலாலான

தாய், அனாதி மலத்தின் பாற்பட்ட உயிர்களைத் தன்மாட்டு வசீகரிப்பது எனப் பொருள்படும்.

VII. சிவம் என்பது அன்பு, இன்பம், ஆனந்தமெனப் பொருள்பட்டு தன்னிடத்தில் பொய்தீர்ந்த அன்புற்றவர்களுக்கு இன்பத்தைக் கொடுத்து ஆனந்தத்தில் அழுத்துவது எனப் பொருள்தரும்.

"அன்பு சிவ மிரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்திலர்।
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந் திருப்பாரே" (திருமந்திரம்)

"இன்பி லினிதென்ற லன்புண்டே லின்புண்டா மன்பி
னிலையே யது" (திருவருட்பயன்)

"உலவா இன்பச்சுடர்" (திருவாசகம்)

"இன்பமே என்னுடை அன்பே" (ஷை)

"இன்பச்சுகவடிவை" (திருக்களிற்றுப்படியார்)

"இன்பதனை யெய்துவார்க் கீயு மவர்க்குருவ மின்பகன
மாதலினா லில்" (திருவருட்பயன்)

"இன்பமு மின்பக்கலவியுமாய் நிற்கும்" (திருமந்திரம்)

"இன்பமயனீச னின்பம் விளைத்தலாற் சம்புவெனும் பேருந்
தகும்" (வள்ளலார்)

"பந்தம் பரியப் பரிமேற் கொண்டான்றந்த வந்தமிலா
ஆனந்தம் பாடுதுங்கா ணம்மானாய்" (திருவாசகம்)

"அருணிதிதரவரு மானந்த மலையே" (ஷை)

"சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வந்தமிலா வானந்த மணிகொடில்லை கண்டேனே" (ஷை)

என்பன பிரமாணங்கள்.

அன்பே இன்பமென்பதற்குப் பிரமாணம்:—

"முடிவிலா வின்பமான வன்பினை யெடுத்துக்காட்ட"

(கண்ணப்ப நாயனார் புராணம்)

"இறவாத வின்ப வன்பு வேண்டி"

(காரைகாலம்மையார் புராணம்)

"அன்பாலின்புறு குணம்"

(திருநாவுக்கரசு நாயனார் புராணம்)

"இன்பமெனு மன்பு முண்டு" (தாயுமானவர் பாடல்)

VIII. இனி சிவ என்பதை வசிவ எனச் சிங்கநோக்காக இருமருங்கும் அருளுடைச் சுடராய்க் கொண்டால், வசிவ என்பது வசி+சிவ என்றாகி வசி=தங்கு+சிவ=ஆனந்தம் எனப்பொருள்பட்டு, என்னிடத்தில் தங்கு, ஆனந்தத்தை அநுபவி எனப் பொருள்தரும்.

இன்னமும், வசிவ என்பது வ+சி+வ என்றாகி, வா+தங்கு+ஆனந்தம் எனப் பொருள்பட்டு, பிறவி வெப்பத்திற்கு அஞ்சியோனே! அஞ்சாதே இங்கேவா, என்னிடத்தில் தங்கு, ஆனந்தம் இதோ! அநுபவி எனப் பொருள் தரும்.

இதனைச் சிவ மூர்த்தங்களின் அருட்டிருமேனிகளிற் காணப்படுகின்ற அபயவரதத் திருக்கரங்கள் வலியுறுத்தும். ஏனைய தேவர்கள் கொண்ட அபயவரதக் கரங்கள் அப்பொருளை வலியுருத்தா வென்பதை,

"தேவெனப் புகழ வதினிமிர்ந்து நிகர் செப்புவா ரபய வரதமாம்—பாவகத் தபிநயத் தொடுற்றகைப் பரப்பி யென்பயமொறுக்குமே—யாவருக்கு மஃதரிது நின்பத மிரப்பயாவையு மளிக்குமால்—மூவருக்கு மொரு தாவரப் பொருளென் மூலமே தழையு ஞாலமே"

எனச் சிவானந்த லகரி விளக்குவதைக் கொண்டேனுந் துணிக.

எனவே, மிகுந்த அன்புடையவர்களாய், விவேகிகளாய், துன்பத்தைத் தருவதாகிய வினைகளை அறவே ஒழிக்

கும் எண்ண முடையவர்களாய், உலவா வின்பத்தை அநுபவிக்குந் தாக முடையவர்களாய், அவ்வின்பத்தைக் கொடுக்குந் தாதாவைத் தேடி ஓடித் திரிபவர்களாய் உள்ளவர்களெல்லாம் நாடி அடைந்து தங்கி அநுபவிப் பதாயுள்ளது சிவம் என அறியத்தக்கது.

2.—சிவன்.

இவ்வாறு பெறப்பட்ட சிவத்திற்கு உண்மை பொது என்னும் சொரூப தடஸ்தங்களாகிய இரண்டு நிலைகளுண்டு.

1. அவற்றுள், சொரூப நிலையாவது :—

"பதி பரமே அது தான்—நிலவு மருவுருவின்றிக் குணங்குறி களின்றி நின்மலமா யேகமாய் நித்தமாகி, அலகி லுயிர்க் குயிராகி அசலமாகி அகண்டிதமா யானந்த வுருவா யன்றிச்—செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த் திகழ்வது" என்றும்

"உலகெலா மாகி வேறா யுடனுமா யொளியா யோங்கி,
யலகிலா வுயிர்கள் கன்மத் தாணையி னமர்ந்து செல்லத்,
தலைவனு யிவற்றின் றன்மை தனக்கெய்த லின்றித் தானே,
நிலவுசீ ரமலனுகி நின்றன னீங்கா தெங்கும்." என்றும்

கூறுமாற்ருற் பெறப்பட்ட நிலை.

2. தடஸ்தமாகிய பொது நிலையாவது, பதி, ஈசனெனப் பெயர் பெற்று, சத்தியோடுகூடி, சிருட்டியாதி ஐந்தொழில் களால் பெத்தநிலைச் சீவர்களை ஆளும் நிலை. அதனுலன்ருே நாயகன் இறைவன் எனப் பொருள் தரும் பதிப் பெயர் பெற்றது.

"இறைவனு வான்ஞான மெல்லா மெல்லா
முதன்மை யனுக் கிரக மெல்லா மியல் புடையான்"

என்பது ஒத்து.

3. ஈசன் என்பது ஆளுவோன் எனப் பொருள் தருவதால் ஆளப்படுவோர் இல்லாவிடில் ஆளுவோனில்லை யென்பது கூறாமலே யமையும். ஆதலால், சிவம் தனது பஞ்ச கிர்த்திய வாயிலாக உயிர்களை ஆளுந்தன்மையால் தொழில் முதன்மை பற்றிச் சிவன் எனப்பட்டது.

4. சிவன் என்பது இன்பத்தை உடையவன் எனப் பொருள் பயப்பதால், ஆணவ மலசம்பந்தத்தால் துன்புறும் உயிர்களுக்கு, அவர்களின் துன்பத்தை நீக்கி இன்பத்தைக் கொடுப்பவனாகும். அற்றாகலினன்றே ஆண்டன்மையை விளக்கும் ஆண்பால் விகுதி கொண்டது. இன்பத்தைக் கொடுப்பது ஆணும், இன்பத்தைப் பெறுவது பெண்ணு மென்ப துலகறிந்ததே. அதனை,

> "இருவர் மடந்தையர்க் கென்பய னின்புண்டா
> மொருவ னொருத்தி யுறின்" என்றும்,
> "கருவிகட் கிறைமை காட்டுபு நிற்றலின்
> புருட னாமம் புனைந்தன னாயினு
> மத்த கிற்குறிப்பிற் சத்திக ளியாமே" என்றும்,

வரும் பிரமாணங்கள் விளக்கும்.

5. சிவன் ஒருவர்க்கே மாறாத இன்பத்தைக் கொடுக்கும் ஆற்றலுண்டென்பதை,

> "இன்பதனை யெய்துவார்க் கீயு மவர்க்குருவ
> மின்பகன மாதலினா லில்"

என்னும் வீட்டு நெறித் திருக்குறள் வலியுறுத்தும்.

3—அடி.

இங்ஙனங் கூறப்பட்டச் சிவத்திற்குரிய இரண்டு நிலைகளுக்கும் வடிவம் கூறுமிடத்து,

1. சிவத்திற்குரிய வடிவத்தைப் பாதம், முகம், முடியென மூன்று பகுப்பாகக் கொண்டு, பரை (அருட்சத்தி) அடியாகவும், பூரணநிறைவு முகமாகவும், வாக்கிற் கதீதமான சுகமே முடியாகவும் கூறப்படும்.

"பரை யுயிரில் யானெனதென்றறநின்ற தடியாம்
பார்ப்பிட மெங்குஞ் சிவமாய்த் தோன்றலது முகமாம்
உரையிறந்த சுகமதுவே முடியாகும்"

என்பது ஒத்து

"சோதிமணிமுடி சொல்லில் சொல்லிறந்து நின்ற
தொன்மை"

என்ற திருவாசகம், முடி வாக்கிற் கதீதமானதெனக் கூறுகின்றது.

"பார்த்த விடமெல்லாம் பரவெளியாய்த் தோன்றவொரு
வார்த்தை சொல்லவந்த மனுவே பராபரமே"

என்ற தாயுமானுர் திருவாக்கு முகதெரிசன முண்டாகக் குருவாக் கெழுந்ததை வலியுறுத்துகின்றது.

"சிவனையவன் திருவடி ஞானத்தாற் சேரச் செப்புவது"

என்றதில் திருவடி யென்பது அருளை யுணர்த்துகின்றது.

"அவனருளாலே அவன்றாள் வணங்கி"

என்பது ஒத்து.

2. சிவனுக்குரிய வடிவத்தைச் சாங்க உபாங்கப் பிரத்தியங்கங்களாகக்கொண்டு, அம்மூவகை அங்கங்களும் அருளே யென்றும், அவை மாயா காரியங்களல்லவென்றும் அறிய வேண்டும்.

"குறித்ததொன் றாகமாட்டாக் குறைவில னாத லானு
நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும்
வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுத லிலாமை யானு
நிறுத்திடு நினைந்தமேனி நின்மல னருளினாலே"
(சிவஞான சித்தியார்)

"எங்கிதுவென் றதுகடந்த வியல்பி னானு
மீறுமுத னடுவொன்று மிலாமை யானு
மோங்கிவளர் ஞானமய னாத லானு
முண்மைபிறர்க் கறிவரிய வொருமை யானுந்
தாங்கரிய வெறுப்பினொடு விருப்பு மெல்லாஞ்
சார்வரிய தனி முதல்வ னாதலானு
நீங்கலரு முயிர்க்குயிராய் நிற்ற லானு
நிறுத்திடுவ னினைந்தவுரு நிமலன் றானே"
(சிவப்பிரகாசம்)

"உருவருள் குணங்க ளோடு முணர்வரு ளுருவிற் றோன்றும்
கருமமு மருள ரன்றன் கரசர ணாதி சாங்கந்
தருமரு ளுபாங்க மெல்லாந் தானரு டனக்கொன் றின்றி
யருளுரு வுயிருக் கென்றே யாக்குவ னமல னன்றே
(சிவஞான சித்தியார்)

என்பன வாதியவற்றால் சிவனுக்குரிய நிக்ரக அநுக்ரகத் திருமேனிகளும், அவற்றின்பாற்பட்டச் சாங்கோபாங்கங்களும் அருளேயென அறியக் கிடக்கின்றது.

இனி, சிவனுக்குரிய பிரத்தியங்கங்களாகிய மலை, ஆறு, மாலை, குதிரை, யானை, முரசு, ஆணை, முதலியவைகளும் பின்வரும் பிரமாணங்களினால் அருளேயென்பது துணியப்படும் அஃதாமாறு:—

"செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீநஞ் சிந்தைசே
ரையன் பெருந்துறையா னாறுரையாய்—தையலாய்
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழிய
மானந்தங் காணுடையா னாறு. (திருவாசகம்)

" * * * * சொல்லாரும்.

ஈசன் பெருமை யிருவினையே யுன்றனக்குப்
பேசுந் தகைமையெலாம் பேணிக்கேள்—பாசம்
பலவுங் கடந்து பரிந்தருள்சேர் பண்பாற்
குலவி விளங்கு துணத்தன்றே—னிலகவே
செய்ய தருமச் செழுங்கிரியின் மீதிழிந்து
வையம் பரவ மகிழ்ந்தெழுந்தங்—கையங்
களவுபயங் காமங் கொலைகோபங் காதி
யளவில்வினை யெல்லா மழித்திங்—குளமகிழத்
தொம்மெனவே யெங்கு முழங்கிச் சுருதிபயில்
செம்மைதரு மாகமங்கள் சேர்ந்தோடி—மும்மலத்தின்
காடடங்க வேர்பறித்துக் கல்விக் கரைகடந்தங்
கோடுபல பூதத் துணர்வழித்து—நீடுபுகழ்
மெய்வாய்கண் மூக்குச் செவியென்னப் பேர்பெற்ற
வைவாய வேட்கை யவாவழித்து—மையுமியல்
வாக்குப் பாதம் பாணி பாயுருபத் தம்பலவு
நீக்கிச் செறிந்து நிறைந்தோடிப்—போக்கரிய
பந்தமெனுஞ் சோலை பறித்துப் பரந்தலைக்கு
மந்தமனம் புத்தியுட னுங்காரஞ்—சிந்திவிழ
மோதி யலைக்கு மருணீர்மை முக்குணமுங்
காதி யுரோமமெலாங் கைகலந்து—சீதப்
புளக மரும்பிப் புலன்மயக்கம் போக்கி
விளைவில் புலன்முட்ட மேவிக்—களபதன
மாதர் மயக்க மழித்துவளர் மண்டலத்தின்
சோதியொரு மூன்றினையுஞ் சோதித்து—நீதிபுனை
யாதார மாறினுஞ்சென் றூறியடல் வாயுக்கண்
மீதான பத்து மிகப்பாய்ந்து—காதிப்
பிருதிவி யப்புத்தேயு வாயுவா காயமெனு
முறுதி நிலமைந்து மோடி—மறவிலா
நான்முகன்மா லீசன் மகேச சனலஞ்சிறந்த

நான்முக மைந்தாஞ் சதாசிவமு—மானதொரு
விந்துநா தங்கடந்த சத்த வெறுவெளியி
லந்தமிலாப் பாழடங்கத் தேக்கியபின்—முந்திவரு
மவ்வறிவுக் கப்பாலுஞ் சென்றகண்ட முள்ளாக்கிச்
செவ்வறிவே யாகித் திகைப்பொழிந்தங்—கெவ்வறிவுந்
தானுய வீடருளித் தன்னிற் பிரிவில்லா
வூனுகி யெவ்வுயிர்க்கு முட்புகுந்து—மேனியிலா
ரஞ்சவத்தை யுங்கடந் தாய பெரும்பே ரொளிக்கே
தஞ்சமெனச் சென்று தலைப்பட்டு—வஞ்சமறத்
தானந்த மில்லாத தண்ணளியா லோங்கிவரு
மானந்த மேன்பதோ ராறுடையான்—ஆனந்தம்
பண்ணும் பயன்சுருதி யாகமங்கள் பார்த்துணர்ந்து
நண்ண வரியதொரு நாடுடையா—னெண்ணெண்
கலையா லுணர்ந்து கருத்தழிந்து காம
நிலையான தெல்லாமுன் னித்திங்—கலைவறவே
தேட்டற்ற சிந்தை சிவஞான மோனத்தா
லோட்டற்ற வீற்றிருக்கு மூருடையா—னூட்டத்தாற்
றெண்ணீ ரருவிவிழச் சிந்தைமயக் கந்தெளிந்
தண்ணீர்மை யெய்தி யுரோமமெலா—நண்ணும்
புளகம் புனைமெய்யர் பொய்யிற்கூ டாம
லுளகம்பங் கொண்டுள் ளுருகி—யளவிலா
மாலா யிருக்கு மவர்மனத்தை வாங்கவருஞ்
மேலாய் விளக்கலங்கள் மெய்யினுன்—சேலாத
வானம் புவன மலைகடலேழ் பாதாள
மூனேந்து பூதத் துயிருணர்ச்சி—ஞானமா
யெல்லாமாயல்லவா யென்னுவா ரெண்ணத்து
னில்லாம னிற்குநின் வாசியான்—சொல்லாரும்
பாதாள மூடுருவிப் பாரேழும் விண்ணேழு
மாதார மாகி யகண்டநிறைச்—சோத
வரிதா யெளிதா யருமறையா நங்கத்

துருவா யுயிரா யுணர்வாய்ப்—பெரிதாய
வெய்யதுயர்ப் பாசமற வீசியே வெம்பிறவித்
துய்ய கடலைத் துகளெழுப்பி—யையமுறுங்
காமக் குரோதமத மாச்சரியங் காய்ந்தடர்த்துச்
சாமத் தொழிலின் றலைமிதித்து—நாமத்தாற்
கத்துஞ் சமயக் கணக்கின்விறற் கட்டழித்துத்
தத்தம் பயங்கொலைக ளாங்கழித்தே—தத்திவரும்
பாசக் குழாத்தைப் படவடித்துப் பாவையர்த
மாசைக் கருத்தை யறவீசி—நேசத்தா
லானவே கங்கொண் டருண்மும் மதத்தினு
லூனையார் தத்துவக்க ளுள்புகுந்து—தேனைப்
பருகிக் களித்துயர்ந்த பன்மறைநாற் கோட்டான்
மருவித் திகழ்ஞான வானையா—னிருமுச்
சமையங் கடந்து தனக்கொப் பிலாத
சுமைதுன்ப நீக்குந துவசன்—கமையொன்றித்
தம்மை மறந்து தழலொளியுள் ளேயிருத்தி
யிம்மை மறுமை யிரண்டகற்றிச்—செம்மையே
வாயுவை யோடா வகைநிறுத்தி வானத்து
வாயுவையு மாங்கே யுறவமைத்துத்—தேயுறவே
யென்று மொருதகைமை யாயிருக்கு மின்பருளே
நின்று முழங்கு நெடுமுரசோ—னன்றியு
மாலு மயனும் வருத்தளித்த வையமெலாஞ்
சாலுமிதற் கப்பாலு மெப்பாலு—மேலை
யுலகு முலகா லுணரவொண்ணு வாரு
மிலகி நடக்குமெழி லாணையான்.'' (நெஞ்சுவிடு தூது)

4.—அடியார்.

இதுகாறுங் கூறப்பட்டச் சிவனடியாகிய திருவருள் ஞானத்தை, மாயாகாரியங்களாகிய வாக்கு மனங்களைத் துணையாகக் கொண்டு அடையமுடியாது. ஏனெனில் அவைகள் பாசக் கூட்டங்களாகையால், ஒளியின் முன்னர் இருளானது வலிகொண்டு நிற்காததைப்போல, ஒளி ஞான மாகிய சிவனடி முன்னர் அவை நிலைபெறா.

ஆன்மாவும், நாடியோ, என்போ, நரம்போ, கோழை யோ, இவைகளாலான தேகமோ, தேகத்திலிருந்து சத்தாதி களை அறியும் ஞானேந்திரியங்களோ, தேகத்துள்ளிருந்து போக்கு வரத்து செய்யும் பிராணவாயுவோ, இந்தத் தேகத்திலிருந்தே புறம்பும் உள்ளும் சென்று மீளும் புரி யட்டகமோ, மனமாதி யந்தக்கரணங்களோ, தான் என மயங்குந் தன்மை யுடையதாதலால், அத்தகைய பசு ஞானத்தாலும் அவ்வடியை அடைய முடியாது. ஆதலி னாலன்றோ,

"அவனருளாலே அவன்றாள் வணங்கி."

என அருள்வாக் கெழுந்தது.

"அங்கவ னருளாற் பத்திஎன் குண்டாம் பத்தியா லவ னருளுண்டாம்—வீங்கிய பத்தி பற்பல பிறப்பில் வேதங்க ளுரைத்திடும் படியே—திங்கறு கரும மியற்றிய பலத்தாற் சிவனருள் செய்திட வருமா—லோங்கிய பத்தியாற் சிவ தரும மொழிவறப் புரிந்திடப் படுமால்"

என்று வாயு சங்கிதையும்,

"உன்திரு வடிக்கே முறுதியா மன்பு முன்திரு வருளினாற் கிடைப்ப—தன்றி நூல் பலவு மாய்ந்ததா லுரைசெ யளப் பருந் திறமையான் மதியான்—மன்றவே கிடைப்பதன்று

மற்றதனை மாதவஞ் செய்திலாக் கயமை—துன்றிய புலையோர் யாங்ஙனம் பெறுவார் சோதியே கருணைவாரிதியே''

என்று சிவதத்துவ விவேகமும் இதனை வலியுறுத்துகின்றன.

ஒருபொருள் மற்றொரு பொருளைச் சார்ந்து அப்பொருளேயாக ஒன்றி நிற்பதானால், சாரப்படும் பொருளின்றன்மைகளிற் சிறப்பினவான சிலதன்மைகளேனும் சாரும் பொருளுக் கிருத்தல் வேண்டும். ஆகலாற்றானே திருநாவலூராளியும் தமதிறுதித் திருப்பதிகத்தில், தம்மைக் கைலையங்கிரிக்குச் சிவபெருமான் அழைத்துக் கொண்ட சிறப்பை வியந்து கூறுமிடத்து, பசுகரணங்களைச் சிவகரணங்களாக்கியும், பசுத்துவத்தைச் சிவத்துவ மாக்கியும் அழைத்துக் கொண்டா ரென்ற பொருள்பட,

''ஊனுயிர் வேறு செய்தான் நொடித்தான் மலை யுத்தமனே''

என்று திருவாய் மலர்ந்தருளினர்.

" சிந்தை தனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா வானந்த மணிகொடில்லை கண்டேனே.''

என்று அமுதடி யடைந்த அன்பரும் அருளிச்செய்தார்.

ஆதலாற் சிவனடியை யடைவதற்குச் சிவனடி ஞானமே வேண்டும்.

'' சிவனையவன் றிருவடி ஞானத்தாற் சேரச் செப்புவது''

என்பது ஒத்து.

இவ்வாறு சிவ ஞானத்தால் அவனடியைப் பெற்றச் சிவனடியார் எங்கும் சிவமே கண்டிருப்பர் என அறியற்பாலது.

" பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தார் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம பலஞான மஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானம் வைந்தவத்தின் கலகர்
தருஞானம் போக ஞாதிரு ஞானஞேயர்
தங்கிய ஞானஞ் சங்கற்பனை ஞானமாகுந்
திருஞான மிவையெல்லாங் கடந்தசிவ ஞான
மாதலாற் சிவன்முத்தர் சிவமேகண் டிருப்பர் "

என்பது பிரமாணவாக்கு.

இத்தகைய சிவனடியார் தமது சீவன் முத்த நிலைக் கண் நிற்கும் இயல்பைப் பின்வருஞ் செய்யுளாலும் அறிக.

" புறம்பேயு மான்கழல்கள் பூசிக்க வேண்டிற்
பூமரத்தின் கீழுதிர்ந்த போதுகளுங் கொண்டு
சிறந்தாருஞ் சீர்ச்சிவனை ஞானத்தா லங்குச்
சிந்திக்கும்படி யிங்குஞ் சிந்தித்துப் போற்றி
யறம்பாவங் கட்குரா மென்கடவோ மென்று
மாண்டவனைக் கண்டக்கா லகம்புறமென் றதே
திறம்பாதே பணிசெய்து நிற்கை யன்றோ
சீரடியார் தம்முடைய செய்தி தானே."

இவர்கள்தான் சிவனதடியா ரெனக்கூறப் படுபவர் கள்.

2. இனி, சிவனுக்கு அடியாராகும் அடிமைத் தொழிலைப் பற்றிக் கூறுவாம்.

அவர்கள், மேலேகூறிய தெய்வீக மங்கள சிற்குணங்க ளோடு கூடிய சிவத்தை,

" திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே "

எனக் கூறியிருத்தலைக் கடைப்பிடித்து, சிவாலயங்களி லிருக்கும் அருட்டிருமேனிகளில் ஒன்றில் பத்திகொண்டு சிவதர்மங்களைப் புரிபவர்க ளாவார்கள்.

சிவதர்மங்கள் என்றமையால், தர்மங்கள் பசுதர்மங் கள் சிவதர்மங்கள் என்று இருதிறப்படும் என்று அறியற் பாலது.

பசுதர்மங்களாவன :—கிணறு, குளம், தண்ணீர்ப் பந்தர், ஆதுலர்க்கன்னம், ஓதுவார்க்குணவு முதலியனவாக எண்ணப்படும் பொதுத் தர்மங்களாம்.

சிவதர்மங்கள் மெல்வினை யென்றும் வல்வினை யென் றும் இருவகைப்படும். மெல்வினையாவது சிவபெருமானைக் குறித்து நந்தனவனம் வைத்தல், பூமாலை புனைந்து சாத்தல், திருக்குளங்கள் அகழ்தல், திருக்கோயில் கட்டுதல், திருக் கோயிலில் அலகிடல், மெழுக்கிடல், தூபதீபங்களமைத்தல், உழவாரப் பணி செய்தல், திருக்கோயிலை வலம் வரல், திரு மேனியைத் தெரிசித்தல் பூசித்தல், திரு மந்திரத்தை எண்ணுதல், திருப்புகழை ஓதுதல், சிவனடியாரைப் பூசித் தல் முதலியனவாகும். இத்தகைய சிவதர்மங்களை இயற் றுதல் விதிமார்க்கமாம். இதுதான் மோக்ஷ தாகமுடைய பலராலும் செய்யக் கூடியது.

வல்வினையாவது தாங்கள் கொண்ட பத்திமேலீட் டால் பாதகமென்றும் பழியென்றும் பாராது, பத்தியால் விழுங்கப்பட்ட மனங்கொண்டு, சிவனடியாரைத் திருப்தி செய்துவைக்கப் பிள்ளையை அறுத்துக் கறிசமைத்தல், சிவபூஜைக் கிடையூறு களைய தாதையைக் கொல்லுதல், சிவபிரான் உண்ணுதற் பொருட்டு ஊட்டியறுத்தல், சிவபி ரான் இன்புறக் கண்ணிடந்தப்பல் முதலிய கொடிய அரிய செயல்களாம்.

இவைகளைப் பத்தியால் உருகிக்கரைந்து பிரபஞ்ச வாசனையிறந்து அன்புமுறுகிய உள்ளமுடையவர்களே செய்யத்தகும். அது கண்ணப்பர் முதலிய அன்பர்களுக்கே முடியும்; ஏனையோருக்கு முடியாது! முடியாது!!.

முற்கூறிய மெல்வினைகளிலும், பழுதுபட்டச் சிவாலயங்களைப் புதுப்பித்தல், தீர்த்தம் திருநந்தன வனங்களைத் திருத்தல், திருக்கோயில் பூசைகளை முட்டின்றிப் பிழைபடாது செய்வித்தல், சிவபுராணங்களை, சிவஞான கோசங்களைப் (புத்தகங்களைப்) புதுப்பித்துப் பேணல், திருமுறைகளை ஓதல் ஓதுவித்தல், கேட்டல் கேட்பித்தல், ஆகியவைகள் மிகச் சிறப்புடைய சிவதர்மங்களாம்.

பழுது நேர்ந்தவைகளைப் புதுப்பித்துப் பேணுதலானது புதிதாக இயற்றுவதைவிட மிகச்சிறப்புடையதென்பதைச் சிவஞான நூல்களாற் செவ்வையாய் அறியலாம்.

ஆதலால் மேற்கூறிய சிவதர்மங்களை இயற்றுவோர் சிவனுக்கு அடிமைத்தொழிலாகும் சிவனடியாராவார்கள்.

"நீறு கண்டிகை கொள்ளும் நியதிய
ரேறு மைந்தெழுத் தென்று முளத்தினர்
மாறில் பத்தியிற் பூசை வயக்குன
ராறு சூடி யடியவ ராவரால்" (சூதசங்கிதை)

"பாவு கோயிற் பணிபல செய்பவர்
விரவு மேன்மைப் புராண விருப்பின
ரூரவரம்மர வோதை யெழுப்புவ
ராவு பூண்டவர்க் கன்பர்க ளாவரால்." (ஷை)

"சாற்றிடு முறப்பியாவுந் தலைக்குமேலுயரா பாவங்
காற்றிடு நதிகள் யாவுங் கங்கைமேலுயராவான
மாற்றிடும் பலரைப் போற்றும் பல்'மலா மடுத்தோர் சன்மம்
பாற்றிடுஞ் சிவனைப் போற்றும் பலத்தின்மேலுயரா வன்றே"

என்பன பிரமாணங்கள்.

5.—திரு.

இனி, திரு என்பது செல்வம் எனப்பொருள்படும். அது, பூவுலகாதிய உலகங்களிலும் பிரமாதி பல தேவ புவனங்களிலும் அநுபவிக்கப்படும் பொருட்செல்வத்தையும், பிருதிவியாதி நாத மீறுன முப்பத்தாறு சாதாரண அசாதாரண தத்துவங்கட் கப்பாற்பட்டதாய் மாயாதீதமாயுள்ள சிவலோகத்தில் அநுபவிக்கப்படும் அருட்செல்வத்தையும் குறிக்கும்.

அவற்றுள், நாம் ஆராய்ச்சிக் கெடுத்துக் கொண்ட திரு என்ற சொல் எந்தச் செல்வத்தைக் குறிப்பிடுகின்றதென்று சற்று விசாரிப்போம். பூவுலக முதலான உலகங்களில் அநுபவிப்பதற்குரிய செல்வமானது கடலலைகளைப் போல மாறி மாறித் தோன்றி மறைந்து நிலைபெறுது போவதாலும், சோரர், அக்கினி, பகைவர் முதலானவர்களால் ஒரோர் காலத்தில் அபகரிக்கப்பட்டு அதனுல் அதனை இழந்தவர்களுக்கு அளவு கடந்த துன்பத்தைத் தருவதாலும், அது அறிவிற் சிறந்தவர்களால் வெறுக்கத்தக்கதாம். மேலும், அச்செல்வத்தை ஈட்டும்போதும் துன்பம், ஈட்டியதைப் பேணும்போதும் துன்பம், அதனைச் செலவிடும் போதும் அல்லது இழக்கும்போதும் துன்பமாம். ஆதலின் அச்செல்வத்தாலாவது துன்பமேயன்றி இன்பமல்ல.

இந்திரன் பிரமன் முதலிய தேவர்கள் பதங்களும் அசுரர் முதலான பகைவர்களால் அபகரிக்கப்பட்டு, அவைகளை உடையவர்களுக்கு அளவு கடந்த துன்பங்களைக் கொடுத்திருப்பதாலும், குறிப்பிட்ட ஒரோர் காலத்தில் அவைகள் அழிந்து போவதாலும் அவைகளும் நிலையில்லா

தனவே. ஆதலால், அவைகளையும் அறிவிற் சிறந்தோர் விரும்பார்! விரும்பார்!!

"காடு போர்தன னிந்திரன் பொன்னகர் கரிந்து
பாடு சேர்ந்தது சயந்தனுஞ் சிறையிடைப் பட்டா
னூடில் விண்பதச் செய்கையீ தெம்பிரானல்கும்
வீடதே யலாற் றன்பறு மார்க்கம்வே றுண்டோ"

எனக் கந்தப்புராணம் கூறுகின்றது.

பிருதிவி முதல் நாதமீறான முப்பத்தாறு சாதாரண தத்துவங்களின்பாற்பட்ட இருநூற்றிருபத்து நான்கு புவனங்களிலுண்டாகிய போகங்களும், நிவர்த்தியாதி ஐங்கலைச் சங்காரங்கள் நிகழ்வுழி அழிந்து போகின்றதனாலே, அவைகளும் நிலையில்லாதனவே. ஆகலான் மாறாத இன்ப விருப்பினர்கள் அவைகளையும் விரும்பார். அதனால் இங்கே கூறப்படும் திரு என்னுஞ் சொல் நிலையில்லாதனவாகிய மேற்கூறிய செல்வங்களை உணர்த்தாது.

பல பிறவிகளிலே செய்த பயன்குறியாத புண்ணிய மேலீட்டால் சிவபிரான்மாட்டு பத்திகொண்டு, அடிமைத் தொழிலியற்றும் அடியார் அநுபவிப்பதும் அநுபவிக்க விரும்புவதும் திருவருட்செல்வம் ஒன்றேயாம். அதுதான் எந்தக்காலத்திலும் எந்தக்காரணத்தாலும் அழியாது நிலைபெற்று, தன்னை அடைந்தவர்களுக்குப் பொன்றாத இன்பத்தைப் பயப்பதாகும். ஆகவே திரு என்னுஞ் சொல் அருட்செல்வத்தைக் குறிப்பதாகும். அருளும் சிவமும் தம்முள் பிரிக்கப்படாத நிலையுடையதனால் அருட் செல்வம் சிவச்செல்வமென்றும், அருள்ஞானம் சிவஞானமென்றும் வழங்கப்பெறும். அது பற்றியே ஸ்ரீசேக்கிழார் பெருமானும், ஆளுடைய பிள்ளையார் உமாதேவியாரால் அருளப்பட்டப் பாலடிசில் உண்டபோது, அருள்

ஞான சம்பந்தரானார் என்று கூறுவதற்குப் பதிலாகச் "சிவஞான சம்பந்த ரானார்" என்று அருளிச் செய்தார். இதனால் அருள், சிவம், திரு என்பன ஒரு பொருட் கிளவிகளென உணரக்கிடக்கின்றது. எனவே இத்தகைய அருட் செல்வத்தையுடைய சிவனடியார்கள் எவ்விதத்தினும் குறைபாடிலராகி சிவனடிக்கன்பில்லாத யாவருக்கும் எளியராகா ரென்பது உணரத்தக்கது. அது பற்றியன்றோ " நாமார்க்குங் குடியல்லோம் " என்றும், " பணிவோமல்லோம்" என்றும், "என்றும் நாம் யாவர்க்கு மிடைவோமல்லோம் " என்றும், " இருநிலத்தில் எமக்கேதிராவாருமில்லை " என்றும் ஆளுடைய அரசும் அருளிச்செய்தது. அவ்வாறே சிவஞான சித்தியாரிலும் சிவஞானச் செயலுடைய சிவனடியார் திறம் கூறுமிடத்து,

" செங்கமலத் தாளிணைகள் சேர லொட்டாத்
திரிமலங்க ளறுத்தீச னேசரொடுஞ் செறிந்திட்
டங்கவர்தந் திருவேட மாலயங்க ளெல்லா
மரனெனவே தொழுதிறைஞ்சி யாடிப் பாடி
யெங்குமியா மொருவர்க்கு மெளியோ மல்லோம்
யாவர்க்கு மேலானோமென்றிறுமாப் பெய்தித்
திங்கண்முடி யாரடியா ரடியோ மென்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடை யோரே."

என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆதலால், செல்வத்துளெல்லாஞ் சிறந்தது அருட்செல்வ மென்றும், அதுவே இங்கு திரு என்ற சொல்லால் உணர்த்தப்பெற்ற தென்றும் அறியவேண்டும்.

" அருட் செல்வஞ் செல்வத்துட் செல்வம்
பொருட் செல்வம் பூரியார் கண்ணுமுள."

என்பது பொய்யாமொழி

6.—கூட்டம்.

ஒரு காரியத்தைச் செய்யவேண்டின் அதை ஒருவரே செய்வதைவிடப், பலர்கூடி ஒருவர் தலைமையின் கீழ்ச் செய்தால், அக்காரியம் மிகச் செவ்வையாயும் எளிதாயும் முடியுமென்பது உலகறிந்ததே. எறும்பு, செல், தேனீ முதலிய அஃறிணைகளிடத்தும் அதனைக் கண்கூடாய்க் காண்கின்றோம்.

ஆன்மாக்கள் எண்ணில்லாதவர்களாய், பலதிறப்பட்ட பாசசம்பந்த முள்ளவர்களாய், அதனால் பலபேதப்படத் தடைப்பட்ட அறிவு இச்சை செயல்களை உடையவர்களாய், அறிவித்தால் அறியுந்தன்மை யுடையவர்களாய் உள்ளவர்கள்.

அவர்களை அக்கட்டினின்றும் விடுவிக்கக் கருதிய முதல்வன், அவர்களது பாச தாரதம்மியத்திற்கேற்ற பல் வேறுவகையான தநுகரணங்களை அவர்களுக்குக்கொடுத்து, அவற்றோடு கூடிய போழ்து அவர்கள் அறிந்து நடக்க வேண்டிய முறைகளை முதல்வனே அறிவித்தாலன்றி அவர் கள் அறிந்து நடக்க மாட்டார்கள்.

ஆகையினாற்றானே அகளமாய் நின்ற முதல்வனும் உமாமகேசர், சோமாஸ்கந்தர், தட்சிணாமூர்த்தி, பிக்ஷாட னர் முதலிய பல திருக்கோலங்களைக் கொண்டு சகளமாய் நின்றதுமாம். சுந்தரபாண்டியரா யிருந்து அரசியற்றியதும், தமிழ்ச்சங்கம் நிறுவித் தலைமைவகித்து நடாத்தியதும், சபாநாதராக மன்றேறியதும், சுவாமிநாதரிடம் குருமொழி பெற்றதும் அதுபற்றியேயாகும்.

அம்முதல்வன் நடத்திக்காட்டிய வழியையே பின் பற்றி இடைச் சங்கம் கடைச் சங்கங்கள் நிலவியிருந்

தலும், இன்று தமிழ்ச் சங்கங்கள் ஆங்காங்கு நிலவுகின்றது மாம்.

தில்லையில் மூவாயிரவரும், திருச்செந்திலில் ஈராயிரவரும், எண்ணில் காலமாகத் தமக்குள் ஓரோர் கூட்டத்தை அமைத்துக் கொண்டே தங்கள் இம்மை மறுமைப் பயன்களைத் தேடிவருகின்றார்கள். அரசாங்கங்களும் அவ்வாறே சில கூட்டங்களைத் துணையாகக் கொண்டே அரசியலை நடத்தி வந்திருக்கின்றன. அது இன்றும் பிரத்தியட்சமே.

தங்கள் கடமைகளை நன்குணர்ந்தவர்களாய், தங்களாச்சிரமத்தர்களாய், தங்களினமான பலரிருந்தால், தங்களிச்சை வழி தாங்கள் நடக்க முடியாதெனக்கருதி, அவர்களை அதிகப்படுத்திச் சேர்க்காமலும், சிலரிருந்தாலும் அவர்களையும் தம்மிடத்தில் நெருங்காமல் வைத்துக் கொண்டும், பொதுச் சொத்துகளில் ஏதேச்சாதிகாரஞ் செலுத்தி, தமது பாசத்தாரை நேசித்து, சமயநோக்கங்களைப் பாவச் செய்யும் நிமித்தம் சமயநன் மக்களால் உதவப்பட்டச் சொத்துக்களை, அம்மக்களும் அவர்கள் சந்ததியாரும் கண்டு வயிறெரிந்து மனம் புழுங்கும்படியாகத் தமது உறவினர்களுக்குதவி, தமதிச்சைவழி நடக்கும் தற்காலத்திய சில சமயத் தலைவர்களைப்போலல்லாது, முன்னிருந்த சமயத்தலைவர்கள், தம்மைச்சூழ அதிகமாகத் தமதினமான கூட்டங்களை வைத்துக்கொண்டே தங்கள் சமய பரிபாலனங்களை நடத்திவந்தார்களென்பது உலகறிந்ததே. ஏதேச்சாதிகாரம் விரும்பிய தலைவர்களைக் கொண்ட சமயங்கள் சீரழிந்து வருவது பிரத்தியட்சமே.

இன்றும் நாடுகள் தோறும், பட்டினங்கள்தோறும், கிராமங்கள்தோறும் வசிப்பவர்கள், தங்கள் தேசங்களை

பட்டினங்களை கிராமங்களை அங்கங்குக் கூட்டப்படுகின்ற கூட்டங்களைக் கொண்டே பல நன்மைக ளுண்டாக ஆண்டு வருவதும் பிரத்தியட்சமே.

எனவே, ஓர் ஓர் பெரிய காரியங்களும் பலர் கூடிய கூட்டங்களாலேயே முற்றுப் பெற்று வருகின்றன வென்று அறியவேண்டும்.

ஆனால், அந்தக் கூட்டங்கள் ஒத்த நோக்க ஊக்கங்க ளுடையவர்களைக் கொண்டதாகவும், தக்க தலைவர்களைக் கொண்டதாகவும் இருக்க வேண்டிய தவசியம். அதற்கு மாறுபடின் பல இன்னல்கள் விளைந்து எதிர்பார்த்த பலன் கள் யாதுங் கைகூடாது பாழாகு மென்பது நிச்சயம்.

இச் சிவனடியார் திருக்கூட்டமும் தம்மில் நண்புடைய வர்களாய், ஒத்த நோக்க ஊக்கங்களை யுடையவர்களா யுள்ளவர்களைக் கொண்டிருத்தலால், களைவது கஷ்டமெனப் பலராலும் ஒதுக்கப் பட்ட இந்தத் திருக்கற்குடிக் கோயில் பிராகாரங்களில் உள்ள மாஞ் செடிகள் நீக்கப்பட்டு, இழக் கும் நிலைமையிலிருந்த சிவாலயமும் இப்பொழுது சீர்ப்பட் டிருக்கின்றது.

"நலமதோன் றடைவதற் கிடையூறு நாதனே
பலவுளவா மன்றே"

என்றதற் கிலக்காக இலௌகிக விருத்திகளாற் றோன்றிய பல இடையூறுகளைத் திருவருட் சார்பால் ஒதுக்கித், தனது நோக்கத்தைப்பெற்று வருகின்ற இச் சிவனடியார் திருக் கூட்டத்திற்குச் சைவ உலகம் என்றுங் கடமைப்பட்டதே.

முடிவுரை.

இதுகாறும் கூறிய வாற்றாற் சிவனடியார் திருக்கூட்டமென்ற சொற்றொடர் சிவம், சிவன், அடி, அடியார், திரு, கூட்டம் என்ற ஆறு அம்சங்களை உணர்த்துவதென்றும், அவற்றுள் :—

1. **சிவம்** என்பது உலகங்களனைத்தையும் தன்னுளடக்கியதும், கட்டு நீங்கிய சீவர்களுக்கு உறைவிடமானதும், உயிர்களுக்குரிய அஞ்ஞானத்தைத் தேய்த்து மெய்ஞ்ஞானத்தை விளக்குவதும், அருளாகிய கிரணங்களோடு கூடியதும், அவ்வருளையே சத்தியாக வுடையதும், தன்வயமாதி எண்வகைச் சிற்குணங்களோடு கூடியதும், மனவாக்கிற் கதீதமானதும், உரை யுணர்விறந்து உணரும் உணர்ச்சியில் விளங்குவதும், உயிர்களோடு உடனுமாய் வேறுமாய் உயிர்க்குயிருமாய்க் கூடியிருப்பதும், சராசரங்களுக்கெல்லாம் ஆதாரமானதும், உயிர்களனைத்தையும் மலத்தினின்று மீட்டுத் தன்னிடத்தில் வசீகரிப்பதும், தன்னிடத்து அன்புள்ளவர்களுக்கு இன்பத்தைக் கொடுத்து ஆனந்தத்தில் அழுத்துவதும், பிறவிக்கஞ்சியவர்களுக்குப் புகலிடமாவதும் எனப் பொருள் படுமென்றும் ;

2. சிவனென்பது, முற்கூறிய சிவத்திற்குரிய சொரூப தடஸ்த நிலைகளிரண்டில், சீவர்களை உய்விக்கும் நிமித்தம் பஞ்சகிர்த்தியஞ் செய்யும் தடஸ்தநிலையில் தொழில் முதன்மைபற்றிச் சிவத்திற்கு வந்தபெயரென்றும்;

3 அடியென்பது, அங்ஙனம் பெறப்பட்ட சிவத்திற்குரிய சொரூபநிலை தடஸ்தநிலைகளாகிய இரண்டு நிலைகளிலும் சிவத்திற்குத் திருமேனியாக வுள்ளது அருளென்றும்,

சிவன் நிக்ரகாநுக்ரக காலங்களில் எடுக்குந் திருமேனிகளெல்லாம் அருளே யென்றும், அவை மாயா காரியங்கள் அல்லவென்றும், அத்திருமேனிகளுக்குரிய சாங்க உபாங்கப் பிரத்தியங்கங்களும் அருளே யென்றும், அதுவே இங்கு அடியெனப்பட்ட தென்பதை யுணர்த்துவதென்றும் ;

4. அடியார் என்பது அத்தகைய அருளினால் விளங்கப் பெற்ற ஞானத்தாலே பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் விளங்கப் பெற்று அவ்வருளில் ஈடுபட்டிருப்பவர்களையும், அவ்வருளைப் பெறுவதற்காகச் சிவனுக்கு அடிமைத் தொழில்களாகும் திருநந்தனவனம் வைத்தல், திருப்பள்ளித் தாமம் அமைத்தல், திருக்கோயில் கட்டுதல், திருமேனியைத் தெரிசித்தல், திருவைந்தெழுத்தோதல், திருவேடத்தைத் தெரிசித்தல் பூசித்தல் முதலிய சிவதர்மங்களை இயற்றுவோரையும் குறிக்கின்றதென்றும் ;

5. திருவென்பது அழியுந் தன்மையனவான பிருதிவி முதல் நாதாந்தம் வரையிலுள்ள புவன போகங்களை நீக்கி, எக்காலத்தும் நிலைபேறுடையதும் இன்பத்தைப் பயப்பதும் ஆனந்த மயமானதுமான அருட்செல்வத்தையே குறிக்கின்றதென்றும் ;

6. கூட்ட மென்பது காரியங்களைச் செய்ய மனவெழுச்சி உடையவர்களுக்குத் தம்மோடொத்த நோக்கமுடையவர்கள் வேண்டியது அவசிய மென்பதையும், அவர்களெல்லோரும் ஒரு தலைவரின்கீழ்த் தங்கள் காரியங்களை முற்றுவிக்க முயற்சிக்க வேண்டு மென்பதையும், அவ்வாறு முயற்சிப்பவர்களுக்கு அரியவும் எளியவா மென்பதையும் உணர்த்துகின்ற தென்றும் ;

இவைகளுக்கு நமது திருக்கற்குடிச் சிவனடியார் திருக்கூட்டத்தாரே எடுத்துக் காட்டாகவுள்ளாரென்றும் பெறப்பட்டது.

இவ்வாறே ஏனைய தலங்களிலும் சிவநேசர்கள் திருக்கூட்டங்களை நிறுவி அவைகளைப் பாலிக்கவும், அவ்வத் திருக்கூட்டங்களோடு அவ்வத் தலவுரிமையாளர்கள் ஒத்துழைக்கவும் திருவருள் சுரக்குமாறு எல்லாம் வல்ல இறைவனடியைப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

முற்றும்.

அறிவிப்பு

க்குந் திருமே...
யா காரியங்கள்
சாங்க உபாங்
...துவே
...தன்

சித்தாந்தப்படமும் சித்தாந்தப் படவிளக்க முஞ் சேர்ந்தது	...	4		
தத்துவ விளக்கச் சுருக்கம்	...	0	3	0
துகளறு போதக் கட்டளை	...	0	2	6
சிவனடியார் திருக்கூட்டம்	...	0	3	0

வி. பி. சார்ஜ் வேறு.

இவைகள் கீழ்க்கண்ட விடங்களில் கிடைக்கும் :—

சோல்டன் அண்ட் கோ.,
193, ஹை ரோட்,
திருவல்லிக்கேணி,
சென்னை.

...வாளர்
...பஞ்சரத்தினம் பிள்ளை அவர்கள்,
கணபதி பண்டசாலை, மலைவாசற்படி,
தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சி.

SOLDEN & Co., MADRAS, S.E.

உ

சிவமயம்

அழகிய படம்! பூசிக்கத்தக்கது!!

சித்தாந்தப் படமும்
சித்தாந்தப்பட விளக்கம் என்னும் புத்தகமும்.

இவற்றில் தத்துவங்களின் தோற்றமும், தொழிலும், அண்டபகிரண்டங்களின் அமைப்பும், பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் முதலிய லோகங்களின் அமைப்பும், இன்னும் அநேக அரிய பெரிய விஷயங்களும் சைவசித்தாந்த சாஸ்திர விதிப்படி விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. 8-வர்ணமுள்ள அழகிய 30" × 20" இஞ்சு அளவுள்ள படமும், அதன் விபரங்களடங்கிய டிம்மி 1/8 அளவில் 20-பாரங்கொண்டதும், இதய தாமரை பஞ்சேந்திரியக் கருவிகள் முதலிய படங்களும் அத்துவாக்களின் வர்ணப் படங்களும் அடங்கியதும், கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு முழு காலிகோ பயிண்டு செய்யப்பட்டதுமான நூலும் தயாராகியிருக்கின்றன. இவை ஒவ்வொரு இந்துவிடமும் இருக்கவேண்டியது அத்தியாவசியம்.

இரண்டும் சேர்ந்து விலை ரூ. 4—0—0.

சிவஞான போதச் சூர்ணிக் கொத்து விலை ரூ. 0—0—6.

வி. பீ. சார்ஜ் தனி.

கிடைக்குமிடம்,

திருவாளர், உ. க. பஞ்சரத்தினம் பிள்ளை,
கணபதி பண்டசாலை, மலைவாசல்,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

சோல்டன் அண்டு கோ.,
193, ஹை ரோட், திருவல்லிக்கேணி,
சென்னை.

Printed by Solden & Co., Madras, S.E.